**சுருக்கம்**

கைத்தறித் தொழில் – தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் – 2013–2014–ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டம் – ஜவுளி நூலகம் அமைத்தல் – ரூ.25.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி1) துறை

அரசாணை (நிலை) எண்.114

நாள் 31.05.2013
(விஜய, வைகாசி 17
திருவள்ளுவராண்டு 2044)

**படிக்கவும் :–**

1. உறுப்பினர் – செயலாளர் மாநில திட்டக்குழு அவர்களின் நேர்முக கடிதம் எண்.2568/SPC/IPT/2012, நாள் 01.02.2013.
2. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கடிதம் ந.க.எண்.34374/2012/என்1, நாள் 11.02.2013.

---

ஆணை:–

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாநில திட்டக்குழு, 2013–2014–ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் (கோ–ஆப்டெக்ஸ்) இயங்கும் ஆப்போ விற்பனை நிலையம் அருகிலுள்ள கண்காட்சித் திடலில் ஜவுளி நூலகம் அமைக்க, ரூ.25,00,000/–யினை வழங்குவதற்கு பரிந்துரை செய்துள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், கைத்தறித் தொழில் பாரம்பரியமிக்க வடிவமைப்புகளுடன் கூடிய துணிகளை உற்பத்தி செய்வதில் பிரத்தியேகமாக விளங்குகிறது என்றும், பாரம்பரியமிக்க கைத்தறித் துணி இரகங்களை மாறிவரும் சந்தை நிலவரத்திற்கேற்பவும் மற்றும் நுகர்வோரின் எதிர்பார்ப்பிற்கேற்பவும், அதிக எண்ணிக்கையில் உற்பத்தி செய்வது என்பது கடினமான காரியமாக உள்ளது என்றும், வாடிக்கையாளர்களின் மாறிவரும் இரசனைக்கேற்ப, அதிக நுட்பமுள்ள வடிவங்களை, தற்போதுள்ள கைத்தறி நெசவாளர்கள் நெசவு செய்வதற்கு அதிக சிரமப்படுகிறார்கள் என்றும், மேற்கண்டவற்றின் காரணமாக கைத்தறி இரகங்களை சந்தைபடுத்துவது என்பது கடினமாக உள்ளதாலும், அதனால் சரக்கு தேங்கி விடுவதாலும் பெரிய அளவில் நெசவாளர் சமூகத்திற்கு வேலை வாய்ப்பின்மை ஏற்படுகிறது என்றும், தமிழகத்தில் உள்ள பாரம்பரியமிக்க கைத்தறி ஜவுளி இரகங்களை வருங்கால

/ த.பி.பா /

சந்ததியினர் தெரிந்து கொள்வதற்கும், கைத்தறித் தொழிலை பாதுகாப்பதற்கும், கைத்தறித் துணி இரகங்களின் விற்பனையை அதிகரிப்பதற்கும், கூட்டுறவுத் துறையை சார்ந்த நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கவும் ஒரு ஜவுளி நூலகம் அமைக்க தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (Co-optex) மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும், இதற்காக 2013–2014–ஆம் ஆண்டைய பகுதி II திட்டத்தின் மூலம் ரூ.25.00 இலட்சம் தொகையை வழங்க அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாநில திட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலனை செய்து, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் இயங்கும் ஆப்போ விற்பனை நிலையம் அருகிலுள்ள கண்காட்சித் திடலில் ஜவுளி நூலகம் அமைக்க ரூ.25.00 இலட்சம் (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) 2013–2014–ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் மூலம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

4. மேலே, பத்தி மூன்றில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையான ரூ.25.00 இலட்சம், (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:-

> " 2851 00 கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் – 103 கைத்தறித் தொழில்கள் – பன்னிரண்டாம் ஐந்தாண்டு திட்டம்– II – மாநிலத் திட்டம் – KY தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு (கோ–ஆப்டெக்ஸ்) மானியங்கள் – 09 உதவித் தொகை – 02 மூலதனச் சொத்து உருவாக்குவதற்கான உதவித் தொகை – ரூ.11.00 இலட்சம் .
>
> (த.தொ.கு. 2851 00 103 KY – 0921)
>
> 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை – ரூ.14.00 இலட்சம் .
>
> (த.தொ.கு. 2851 00 103 KY – 0930)

5. மேற்கண்ட கணக்குத் தலைப்பின் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலுவலர் (Estimating, Reconcilling and Controlling Authority) கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் ஆவார்.

6. மேலே, பத்தி மூன்றில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்குவதற்கு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

7. 2013–2014–ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டத்தின் கீழ் மேலே பத்தி மூன்றில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியின் முன்னேற்றம் குறித்த அறிக்கையினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.23684/நிதி(தொழில்)/2013, நாள் 15.05.2013–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கோ. சந்தானம்
அரசு செயலாளர்

பெறுநர்
கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், சென்னை – 600 108.
தனி அலுவலர் / மேலாண்மை இயக்குநர், கோ–ஆப்டெக்ஸ், சென்னை–8.
கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை–600 015
மாநில தலைமைக் கணக்காயர் (A & E) சென்னை – 600 018 / (பெயரில்)
மாநில தலைமைக் கணக்காயர் (CA), சென்னை – 600 018 / (பெயரில்)
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை – 600 001

**நகல்:-**
நிதி (தொழில்/வரவு–செலவு/பொது – II) துறை, சென்னை–9.
கைத்தறி , கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (ஏ1 / பி1) துறை,
சென்னை – 600 009.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை
செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை – 9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்கள்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்